2012 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் நீங்கள் இன்றைக்குத்தான் என்னுடைய அறைக்கு வந்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது துறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. பதில் வந்தவுடன் அதுகுறித்துப் பரிசீலிக்கலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து அமரவும். (குறுக்கீடுகள்) இல்லை. இன்றைக்குத்தான் உங்கள் உறுப்பினர் பேசுகிறாரே! (குறுக்கீடுகள்)

இன்றைக்கு பட்ஜெட் மீதான விவாதத்திலே உங்கள் உறுப்பினர் பேசுகிறார், இல்லையா? உங்கள் கருத்தை அவரிடம் சொல்லிச் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) Please sit down. (குறுக்கீடு)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

(முற்பகல் 11–05

4. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக–Panel of Chairmen—நியமிக்கிறேன்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

திரு. தங்க தமிழ்ச்செல்வன்

திரு. கே.பி. அன்பழகன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. பி.ஜி. நாராயணன்

திரு. சு. குணசேகரன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY